REGISTERED No. M. 1014.

உ

ஸ்ரீ வாணிசகாயம்.

கலைமகள்.

புதுவைக் கலைமகள் கழகத்தினின்றும் வெளிவரும்
மாதாந்தப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல்.
வீடுபெறநில்.

வெண்டாமரை ௫.	1917-ம் ஆ நவம்பர் மீ	இதழ் கக.

பத்திராதிபர்:— சி. பங்காருப் பத்தர்,
கல்வே காலேஜ் தமிழ்ப் பண்டிதர்,
புதுவை.

வருடச் சந்தா

உள்ளூரார்க்கு ரூ 1	வெளிநாட்டுக்கு ரூ 2
வெளியூரார்க்கு ரூ $1\frac{1}{4}$	தனிச் சஞ்சிகை அணா 2

புதுவை — லைமோான் சின்னையா பிரஸ்.

உள்ளுறை.

பக்கம்.

திருவள்ளுவர் திருக்குறள்:— பத்திராதிபர் 213
கண்மணி கமலா :— ஸ்ரீ தம்பி - புருஷோத்தமப்பிள்ளை ... 218
பிறப்பிறப்பு :— ஸ்ரீ க. கண்ணுச்சாமிப்பிள்ளை,
சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலை 221
முக்கபுரி இரகசியம்:— ஸ்ரீ S. V. G. பாலன் 225
அரச வாழ்த்து :— ஸ்ரீ கார்த்தை T. S. முருகேசன் ... 228
தமிழ் மருத்துவப் பெட்டி :— ஓர் மருத்துவன்... ... 229
சுவிவேக தருப்பணம் : — குருபாதசேகரன். 232
முக்திகோபநிஷத் : — ஓர் ஆரியன். 233
பிரிவிடையாற்றுப் பேதுறு கலுழ்ச்சி :— ஸ்ரீ ஜ. ஏகாம்பர
ஐயர், தமிழ்ப்பண்டிதர், சீகாழி. 235

தொழில் பத்திரிகை.

நமது தேசாபிமானிகளுக்கும், பத்திராபிமானிகளுக்கும், தமிழபிமானிகளுக்கும் தெரிவித்துக்கொள்வது என்னவென்றால் :—

நாம் முன் விஸ்வ கர்ம குலோபகாரி என்ற பெயருடன் நடத்தி வந்த மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகையைச் சென்ற எப்ரல் மாதமுதல் "தொழில்" என்னும் புதிய பெயரால் நடத்திவருகிறோம்,

இதற்குத் தாங்கள் சந்தாதாரர்களாகச் சேருவதுடன் தங்கள் பந்துமித்திரர்களுக்கும் தெரிவித்து அவர்களையும் சந்தாதாரர்களாகச் சேரும்படி செய்ய வேண்டுகிறேன்.

இதற்கு வருஷ சந்தா ரூபா மூன்று.

முன் பணம் அனுப்பாதவர்களுக்குப் பத்திரிகை அனுப்பப்பட மாட்டாது. சென்ற மூன்று வருஷத்திய "விஸ்வ கர்ம குலோபகாரி" பத்திரிகை ஒரே புத்தகமாக பைண்டுசெய்துள்ளது. விலை ரூ 6-0-0 வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

கோ - கன்னியப்ப ஆச்சாரி,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

உ

ஸ்ரீவாணி சகாயம்.

கலைமகள்.

புதுவைக் கலைமகள் கழகத்தினின்றும் வெளிவரும்

மாதாந்தப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல். வீடுபேறுநில்.

வெண்டாமரை ௫.	1917-ம் ஆ நவம்பர் மீ	இதழ் ௧௧.

திருவள்ளுவர் திருக்குறள்.

௩-ம் அதிகாரம்.

நீத்தார் பெருமை.

இது நீத்தாரது பெருமையென விரியும். நீத்தலாவது அகப்பற்று, புறப்பற்று என்னும் இருவகைப் பற்றுக்களையும் துறத்தல். எனவே முற்றத் துறந்த முனிவரது பெருமையைச் சொல்லுதல் என்பது இத் தொடர்க்குப் பொருளாகும்.

முற்றத் துறந்த முனிவரது பெருமையே உலகில் மேலானது. ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் வருணத்திற்கும் நிலைக்கும் உரிய ஒழுக்கம் தவறாமல் நடக்க அறம் வளரும். அறம் வளரப் பாவந்தேயும். பாவந் தேய அறியாமை நீங்கும். அறியாமை நீங்க இது நித்தம் இது அநித்தம் என்னும் பகுத்தறிவும், நிலையில்லாத இம்மை மறுமை யின்பங்களில் வெறுப்பும், பிறவித் துன்பங்களும் தோன்றும். அவை தோன்ற வீட்டின்கண் ஆசையுண்டாம். அது உண்டாக, பிறவிக்குக் காரணமாகிய வீண் முயற்சிகளெல்லாம் நீங்கி முத்திக்குக் காரணமாகிய யோக முயற்சியுண்டாம். அது உண்டாக, தத்துவ ஞானம் பிறந்து புறப்பற்று

கிய எனதென்பதும், அகப்பற்றாகிய யானென்பதும் விடும். ஆதலின் இவ் இரண்டு பற்றுக்களையும் இம்முறையே வெறுத்து விட்ட முனிவர்களது பெருமையே மேலானதென்று சமய நூல்களெல்லாம் சாற்றுகின்றன. ஆகவே, 1. ‘நூல்களது துணிவு, தமக்குரிய ஒழுக்கத்தின்கண்ணே நின்று துறந்தாரது பெருமையை, மேலான பொருள்கள் பலவற்றுள்ளும் இதுவே மேலானதென்று விரும்பும்’ என்க.

அன்றியும், அம் முனிவரது பெருமையை அளவிட்டுரைக்க எவரால் முடியும்? அப்பெருமைக்கும் ஓர் அளவுண்டோ? 2. ‘யான், எனது என்னும் இருவகைப் பற்றுக்களையும் விட்டவரது பெருமையை இவ்வளவென்று எண்ணிக்கையினாலே சொல்லி அறியப் புகுந்தால், அளவுபடாமையின், இவ்வுலகத்துப் பிறந்திறந்தவரை யெண்ணி இத்தனை பேர்களென்று அறியப்புகுந்தாற் போலும்.’ முடியாதென்க.

திகிரியுருட்டி உலகமுழு தாண்ட அரசர் முதலாயினர் பெருமையும் அவர் பெருமைக்கு ஈடாகமாட்டாது மற்றெல்லாப் பெருமைகளும் அதற்குத் தாழ்ந்தவையே. ஆதலின் 3. ‘பிறப்பு வீடு என்னும் இரண்டினது துன்ப இன்பக் கூறுபாடுகளை ஆராய்ந்தறிந்து, அப் பிறப்பறுத்தற்கு, இப் பிறப்பின்கண் துறவறத்தைப் பூண்டவரது பெருமையே உலகின்கண் உயர்ந்தது.’ ஆதலின் நீத்தார் பெருமையே எல்லாப் பெருமைகளினும் மிக்கதென்க.

ஐம் பொறிகளே ஒருவனை உலக விடயங்களில் இழுத்தலைத்து வருத்துவன. அவை யடக்கப்படாதவரையும் அவன் உய்தி பெறுதல் முடியவே முடியாது. பொறிகளை வெற்றி

---

1. ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
   வேண்டும் பனுவற் றுணிவு.
2. துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்
   திறந்தாரை யெண்ணிக்கொண் டற்று.
3. இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
   பெருமை பிறங்கிற் றுலகு.

கொண்டவனே முத்தி யுலகம் புகுதற்குரிய முனிவன். ஆதலின், 4. 'அறிவென்னும் அங்குசத்தினால், மெய், வாய், கண், மூக்கு, செவி யென்னும் பொறிகளாகிய யானைகள் ஐந்தையும் தத்தம் புலன்களின்மேற் செல்லாமற் காப்பவன், எல்லா நிலங்களினும் மேலானதென்று சொல்லப்படும் வீட்டு நிலத்திற்கு ஓர் வித்தாவான்.' வித்துப்போல் அந் நிலத்திற் சென்று முளைப்பனென்க. அவன் இங்கே பிறந்தும் இறந்தும் வருகிற மகனாவனோ? அல்லனென்றுணர்க.

பொறிகளை வென்ற முனிவர்களது வல்லமை உலகத்தில் மிகப் பெரியது. 5. 'சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் புலன்களிற் செல்கின்ற ஐந்தாசைகளையும் ஒழித்தவனது வல்லமைக்கு, அகன்ற பொன்னுலகத்துள்ள தேவர்கட்குத் தலைவனாகிய இந்திரனே போதிய சான்றாம்.' இந்திரன் கௌதம முனிவரது மனைவியைக் காதலித்தான். எதனால்? கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் ஐம்புல ஆசைக்கு வசப்பட்டதனால். அதனால் என்ன பயன் பெற்றான்? ஐம் புலன்களையும் வென்றவராகிய கௌதம முனிவரால் உடம்பெல்லாம் யோனிக்கண்களாகும்படி சபிக்கப்பட்டான். ஐந்தாசைகளையும் நீக்காமல் சாபத்தையடைந்து நின்று, அவ்வாசைகளை நீக்கினவனாகிய கௌதம முனிவனது வல்லமையைத் தெரிவித்தான். நீத்தாரது வல்லமையைத் தெரிவித்தற்கு இதை விட வேறு சான்றும் வேண்டுமோ?

மேலும், உலகத்திற் பெரியோர்கள் இயமம், நியமம், ஆதனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்னும் எண்வகை யோகங்களைச் செய்து உடம்பின் பயனைப் பெறுவார்கள். இங்ஙனமன்றி மனத்தை வேண்டியபடி பொறிகளின் வழியே போக விடுத்து ஆசை கொள்ளுதல், கோபித்தல்

---

4. உரனென்னுந் தோட்டியா னோரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து.

5. ஐந்தவித்தா னாற்ற லகல்விசும்பு ளார்கோமா
னிந்திரனே சாலுங் கரி.

முதலிய காரியங்களைச் செய்வது சிறியோரது செயல்களாகும். மனத்தைப் பொறி வழியே போக விடுத்தல் அரிய செயலாகுமா? அது எவர்க்கும் எளிய செயலன்றோ? மனத்தைப் பொறிவழி போக்காது இயம நியம முதலிய தவங்களைச் செய்தலே அரிய செயலாகும். பெரியோர் அவ்வெளிய செயல்களைச் செய்யமாட்டார்கள். ஆகவே, 6. 'ஒத்த பிறப்பினராகிய மக்களுள், செய்தற்கு எளியவற்றைச் செய்யாது அரியவற்றைச் செய்பவர் பெரியோர். அவ் வெளியவற்றைச் செய்து செய்தற் கரியவைகளைச் செய்யமாட்டாதார் சிறியர்.' என்க.

அன்றியும், உலகமே பெரியாரது அறிவின்கண் அடங்கியதாகும். சத்தம், பரிசம், உருவம், இரதம், கந்தம் என்னும் தன்மாத்திரைகளைந்தும், அவற்றிலே தோன்றிய நிலம், நீர், தீ, காற்று, வான் என்னும் பூதமைந்தும், அவற்றின் கூறாகிய மெய், வாய், கண், மூக்கு, செவி யென்னும் ஞானேந்திரிய மைந்தும், வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம் என்னும் கன்மேந்திரிய மைந்தும், இவற்றைத் தெரிகின்ற புருடனும், அவன் தெரிதற்குக் காரணமாகிய மான், அகங்காரம், மனம், எனப்பட்டவையும், அவற்றுக்கு முதலாகிய மூலப் பகுதியும் ஆகிய இவ்விருபத்தைந்து கூட்டமல்லது உலகு என வேறில்லையென்று உலகினது உண்மையை அவர் அறிகின்றனர். ஆதலின், 7. 'சுவையும், ஒளியும், ஊறும், ஓசையும், நாற்றமும் என்று சொல்லப்பட்ட பஞ்ச தன்மாத்திரைகளது கூறுபாட்டை ஆராய்பவனது அறிவின்கண்ணதே உலகம்' என்க. ஆதலின், ஐம்பொறி யடக்கமும், யோகப் பயிற்சியும், தத்துவ ஞானமும் நீத்தாரது பெருமைக்கு ஏதுவாமென் றுணர்க.

முற்றத் துறந்த முனிவர் அருளிக் கூறினும் வெகுண்டு கூறினும் அம் மொழிகள் அவ்வப் பயன்களைத் தந்தே விடும்

---

6. செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
 செயற்கரிய செய்கலா தார்.

7. சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
 வகைதெரிவான் கட்டே யுலகு.

ஆற்றலுடையன. அச்சொற்கள் பயன்பட்டு அவர் பெருமையை யறிவிக்கின்றன. ஆகவே அவர்கள் பெருமையைத் தெரிவதற்கு வேறு சான்று வேண்டுவதில்லை. 8. 'பயன் நிறைந்த மொழிகளையுடைய துறந்தவரது பெருமையை, நிலவுலகத்தின்கண், அவராணையாகச் சொல்லிய மந்திரங்களே கண்கூடாகக் காட்டிவிடும்' என்க.

அசையாமையும் பெருமையுமுடைய குணங்கள் நிறைந்த பெரியார்மாட்டு, பொறுப்பரென்றெண்ணி, சிறிதும் பிழை செய்தல் கூடாது. அவர்கள் சின முதலிய தீக்குணங்களை ஒழித்தவராயினும், அநாதியான பழக்கத்தினாலே ஒரோவிடத்து மனத்தின்கண் கோபம் தோன்றும். அது தோன்றிய அப்பொழுதே அதனை மெய்யுணர்வு அழிக்கும். ஆயினும், 9. 'துறவு, மெய்யுணர்வு, அவாவின்மை முதலிய நற்குணங்களாகிய மலையின்மேல் வறி நின்ற முனிவரது கோபம், தான் உள்ள அளவு கணப்பொழுதேயாயினும், கோபிக்கப்பட்டவராலே தடுத்தல் அரிதாம்' என்க. ஆதலின் பெரியாரது ஆணை பெரிதென்க.

அவ்வாறு ஆணையுடையவராயினும் அம் முனிவர்கள் உயிர்களினிடத்து மிக்க அருளுடையவராவார்கள். எவ்வுயிரையும் தம்முயிர்போலெண்ணுபவர்கள். அழகிய தட்பத்தை (தண்ணளியை) யுடைய காரணத்தினாலேயே அந்தணர் எனப் பெயர் பெற்றவர்கள். ஆதலின், 10. 'எல்லா வுயிர்கள் மேலும் செவ்வையான அருளை விரதமாகக் கொண்டு நடக்கையினாலே அந்தணரென்று சொல்லப்படுவார் துறவறத்தில் நின்றவர்' என்க.

இத் துணையுங் கூறியவாற்றால், முற்றத் துறந்த முனிவரது பெருமையே மேலானதென்பது நூற்றுணிபென்பதும், துறந்தவர் பெருமை சொல்ல முடியாததென்பதும், துறவறத்தைக்கொண்டவரது பெருமையே உலகிலுயர்ந்ததென்பதும்,

---

8. நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.

9. குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்த லரிது.

10. அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான்.

ஆதலின் எல்லாப் பெருமைகளினும் நீத்தார் பெருமையே மிக்கதென்பதும், அறிவினால் ஐம்புலன்களையும் வென்றவரே வீடு பெறுதற்குரியரென்பதும், ஐந்தவித்தவனது ஆற்றலுக்கு இந்திரனே சான்று என்பதும், செய்தற்கு அரியவற்றைச் செய்பவர்களே பெரியோர்கள் என்பதும், பஞ்ச தன்மாத்திரைகளின் வகையை ஆராய்பவன் அறிவினிடத்ததே யுலகமென்பதும், ஆதலின் ஐந்தவித்தலும் யோகப் பயிற்சியும் தத்துவ வுணர்வுமே அவர்கள் பெருமைக்கேது வென்பதும், முனிவரது பெருமையை அவர்கள் மந்திரங்களே காட்டுமென்பதும், முனிவரது வெகுளி தடுக்கமுடியாததென்பதும், ஆதலின் அவராணை பெரிதென்பதும், அந்தணரென்று சொல்லப்படுவோர் துறவறத்தில் நின்றவரே யென்பதும், ஆதலின் அவ்வாறாணையுடையராயினும் உயிர்கள்மாட்டு அருளுடையவரென்பதும், பிறவும் பெறப்பட்டன.

கண்மணி கமலா.

நீதிபுகட்டும் ஓர் இனிய தமிழ் நாவல்.

(வெண்டாமரை ௫, இதழ் ௧௦, 163-ம் பக்கத் தொடர்ச்சி.)

௩-வது அத்தியாயம்.

மணவினைகளெல்லாம் சம்பிரமமாகவும் பெருமிதமாகவும் நடைபெற்றன. பதார்த்த வகைகளையும் சாமக்கிரிகைகளையும் அபரிமிதமாகச் சுப்பையன் சேகரித்து வைத்துவிட்டுப் போனதுடன் பாகஞ் செய்வதில் வல்லுநரான நாற்பது சுயம்பாகிகளையும் பல திக்குகளினின்றும் தருவித்து வைத்திருந்தான். முகூர்த்த தினத்தன்று நடந்த பந்திபோஜனம் வர்ணிக்கக்கூடியதன்று. சதாசிவ சாஸ்திரிகள் கலியாணச் சாப்பாட்டை உண்டு களித்து இற்றைநீக்கும் உயிருடனிருக்கும் விருத்தாப்பிய விப்பிரர்கள் இரண்டொருவர், தங்கள் ஆயுட்காலத்தில் அத்தகைய திவ்விய போஜனத்தைத் தாங்கள் எக்காலத்திலும் அருந்தினதே யில்லையென்றும், அதை நினைக்குந்தோறும், தங்கள் நாவில் நீர் சுரக்கிறதென்றும் சொல்லிக்கொண்டிருப்பார்களானால் அதன் பெருமையை விவரித்துக்கூறவும் வேண்டுமோ.

விலாப்புடைக்க வுண்ட விப்பிரர்களெல்லாம், பல அண்டாக்களில் வாசனைத் திரவியங்களோடு அரைத்துக் கொட்டிக்கிடந்த சந்தனச் சாந்தை உடம்பு முழுதும் அப்பிக்கொண்டு மாலைக் காலக்ஷேபத்திற்காகக் குறிக்கப்பட்டிருந்த பரத நாட்டிய சங்கீதக் கச்சேரியை வெகு ஆவலோடு எதிர்நோக்கி நின்றனர்.

ஏற்கனவே இக் கச்சேரி நடைபெறுவதற்கு, தஞ்சை ரஞ்சிதமணியையும், மதுரை மங்களாம்பாளையும், பல்லாரி பாலாமணியையும், தலைக்கு நூறு வராகன் கொடுப்பதாக முடிவு செய்து அமர்த்தி வைத்துவிட்டுப் போயிருந்தான் சுப்பையன். பொழுது சாய்ந்தவுடன் சித்திரக் கொட்டகையின் தீபங்களெல்லாம் பல சூரியர் உதயமானதுபோல் பிரகாசிக்கத் தொடங்கின. அப்போது விகட வேங்கடராமையர் சதாசிவ சாஸ்திரிகளிடம் சென்று, “சாஸ்திரிகளே! சபை கூடியாயிற்று, எல்லாம் சித்தமாயிருக்கின்றது, கச்சேரி ஆரம்பிக்கலாமே” என்றார்.

சுப்பையன் ஏற்பாடுகள் ஒன்றும் அறிந்திராத சாஸ்திரிகள் விஷயம் தெரிந்தவுடன் திடுக்கிட்டு, சபை நடுவிற் சென்று அஞ்சலியஸ்தராய் நின்று சபையாரை நோக்கிக் கூறுகின்றார்: “அடியேன் அறிவிக்குமோர் விண்ணப்பத்தை அங்கீகரிக்க வேண்டுகின்றேன். இன்று மாலை நமது கிருகத்தில் நடைபெற இருந்த பரத நாட்டிய சங்கீதக் கச்சேரி நிகழாவண்ணம் தடுப்பதற்கு அடியேனை க்ஷமித்தல் வேண்டும். என் அனுமதியின்றியே அது சுப்பையரால் குறிக்கப்பட்டதுபோலும். பிராமணோத்தமர்களாகிய தங்கள் திருமுன்னர், கேவல விலை மடந்தையரா கானஞ் செய்ய யோக்கியதையுடையவர்கள்?”

—“தோஷமில்லை சாஸ்திரிகள்! அந்தத்தஞ்சை ரஞ்சிதமணி பாடினால் பறவைகளும் சொக்கிக் கீழே விழுகின்றனவாமே. கல்லும் உருகுமாமே. மதுரை மங்களாம்பாள் காந்தர்வர்களும் மயங்கி விழும்படி வீணை வாசிக்கின்றாளாமே. இந்த ஸ்திரீ ரத்னங்கள் வேசைகளாயிருந்தாலென்ன, தாசிகளா யிருந்தாலென்ன? அவர்கள் சங்கீதமும் நடனமும் தானே நமக்கு வேண்டியது” என்று வெகு அலங்காரமாகச் சொன்னார் விகட வேங்கடராமையர்.

—“அப்படியன்று ஐயரவாள்! விபசாரிகளாகிய விலை மாதர்கள் எத்தனை மதுர சுரமாகக் கானம் செய்யினும் வைதீகர்களும் கிருகஸ்தர்களும் அவர்கள் ஆடல்களையும் பாடல்களையும் பார்க்கவும் கேட்கவும் போகுமா? பசுவின்பால் அதி பரிசுத்தமுள்ளதாயினும் அது நாயுண்ணும் மட்கலத்தில்கொட்டியிருப்பின் அதைத் தீண்டவும் விரும்புவோமா? நமது

இந்தக் கிருகத்தில் எக்காலத்திலும் எக்காரணத்தினாலும் ஒரு விலை மகளும் அடி வைத்திராள். தலை முறை தலை முறையாக எமது குடும்பத்தில் அனுட்டித்துவந்த இக் குல தர்மத்தைப் பங்கப்படுத்தும் இப் பழியை ஒன்றுக்கும் பற்றாதவனாகிய யானோ சமத்திக்கொள்ள வல்லவன்" என்று கூறி, நாடகக் கணிகைகளைத் தக்ஷணமே திருவதிகையைவிட்டுச் செலவு கொடுத்து அகலச் செய்து, நடந்த அசந்தர்ப்பத்தைப்பற்றிப் பெரிதும் துக்கித்தார். "அந்தோ! சற்று முன்னாலோசனை யில்லாமற் போயிற்றே, இதிகாச புராண உபன்னியாசங்களும், பகவத் கீர்த்தனங்களும் உத்தம பண்டிதர்களைக்கொண்டு நடப்பித்து இம் மகாசபையைச் சத்காலக்ஷேபத்தினால் இரம்மியப்படுத்தியிருக்கலாமே" என்று மிகவும் பிரலாபித்தார்..

— "சாஸ்திரிகளே! தாங்கள் பிராமண சபையொன்று பிரத்தியேகமாகக் கூட்டி, சிற்சில விஷயங்களை நம்மவர்களுடைய க்ஷேமார்த்தமாகக் கலந்து பேசவேண்டுமென்று பலமுறையும் கூறியிருக்கிறீர்களே. அதற்கு இது உற்ற சமயமல்லவா" என்றார் நண்பர் சாம்பமூர்த்தி ஐயர்.

—"ஆமாம் அத்தகைய காலக்ஷேபமே உசிதம்" என்றனர்• அருகிலிருந்த அந்தணர்களனைவரும்.

உடனே பிரத்தியேக பூஜையொன்று நடக்கப்போகிறதாக உபாயமாகப் பிரஸ்தாபித்தார்கள். அப்போது மறையவரல்லாத மற்றவரனைவரும் மணமனையை விட்டகன்றனர். இவ்வாறு பிராமணத் தனிச் சபையொன்று கூடியவுடன், சதாசிவ சாஸ்திரிகள் எழுந்து பின் வருமாறு கூறுகின்றார்.

"எம் முன்னோர்கள் இடையிடையே விப்பிரோத்தமர்களை யெல்லாம்இங்குஒருங்குகூட்டி, நம்மவர்கட்கு அனுகூலார்த்தமான விஷயங்களை யெல்லாம் கலந்து பேசி, நம் குல க்ஷேமத்தை விருத்தி செய்து வந்தார்கள் என்பதைப் பல முறையும் யான் கேள்வியுற்றிருக்கின்றேன். வயதிலும் அறிவிலும் கேள்வியிலும் பெரிதும் சிறியேனாகிய எனக்கு, பிராமணோத்தமர்கள் நிறைந்த இந்த மகா சபையில் ஏதொன்றுங் கூறநாவெழவில்லையெனினும், நம்மவர் க்ஷேமத்தைக் கோரிப் பல நாளாக எண்ணியிருக்கும் சிலவற்றைச் சொல்லியே தீர வேண்டுமென்ற ஆசை யென்னைத் தூண்டுதலால், கிருபா மூர்த்திகளாகிய நீங்கள் யாவரும் நானெடுத்துக் கூறுவதிலுள்ள குற்றங் குறைகளை க்ஷமித்து நற் கருத்துக்களைமாத்திரம் அங்கீகரிக்கும் வண்ணம் தங்கள் அடிக் கமலங்களை வணங்கிக் கேட்டுக்கொள்ளுகிறேன். (வரும்)

தம்பி - புருஷோத்தமன்.

பிறப்பிறப்பு.

பிறப்பிறப்பாவது ஆன்மாக்கள் தாம் இக்கன்ம பூமியிலே செய்த நல்வினை தீவினை யென்னும் இருவினைக்கீடாக மேலேயுள்ள சுவர்க்கத்திலும், கீழேயுள்ள நரகத்திலும், நடுவேயுள்ள பூமியிலும், தமக்கு ஒரு நிலைமையில்லாத கொள்ளிவட்டமுங் காற்றாடியும்போலச் *சுழன்று திரிவதேயாம்.

இப்படிப் பிறந்திறந் துழலும் ஆன்மாக்கள் எடுக்குஞ் சரீரம் மூவகைத்து. அவை, மேன்மையுடைய பூதசாரமான தேவசரீரம், பஞ்சபூதமயமான யாதனாசரீரம், பஞ்சபூத பரிணாமமான மனிதசரீர முதலியனவாம். இவை நால்வகைத் தோற்றத்தினை உடையனவாம். அவைகளுள், தேவசரீரம் நல்வினைப்பயனாகிய இன்பத்தைச் சுவர்க்கம் முதலிய மேலுலகங்களிலே அனுபவிக்கப் பூத சாரத்தினின்றும் கணப்பொழுதில் உண்டாவன. யாதனாசரீரம் தீவினைப்பயனாகிய துன்பத்தை நரகத்தில் அனுபவிக்கப் பஞ்ச பூதத்தினின்றும் உண்டாவன. மனிததேகம் முதலிய நால்வகைத் தோற்றத்தினை யுடையனவாய சரீரம் மேலேயுள்ள சுவர்க்கத்திலும், கீழேயுள்ள நரகத்திலும் அனுபவித்துத் தொலைத்துத் தொலையாமல் எஞ்சிநின்ற இருவினைப்பயன்களாகிய இன்ப துன்ப மிரண்டையும் பூமியில் அனுபவிக்கப் பஞ்சபூத பரிணாமத்தினின்றும் உண்டாவனவாம். பரிணாமம் - நெய்யிற் புழுப் புழுத்தாற்போல்வது.

நால்வகைத் தோற்றங்களாவன அண்டசம், சுவேதசம், உற்பிச்சம், சராயுசம் என்பவைகளாம். அவைகளுள், அண்டசம் முட்டையிற் றோன்றுவன. சுவேதசம் வேர்வையிற் றோன்றுவன உற்பிச்சம் வித்து வேர் கிழங்கு கொம்பு கொடி கொழுந்து முதலியவைகளை மேற்பிளந்து தோன்றுவன. சராயுசம் கருப்பையிற் றோன்றுவன. கருப்பையிலே முதுகெலும்புடைய மனிதர்களும், நாற்கால் விலங்குகளும் பிறக்கும். முட்டையிலே பறவைகளும், ஆமை பாம்பு அறணை உடும்பு ஓந்தி இப்பி முதலிய ஊர்வனவும், மீன் முதலை தவளை முதலிய நீர்வாழ்வனவும் பிறக்கும். வேர்வையிலே கிருமி புழு பேன் எறும்பு முதலிய சில ஊர்வனவும், விட்டில் முதலிய சில பறவைகளும் பிறக்கும். மண்ணின் கண்ணே தண்ணீர் காற்று வெயில் இவைகள் பொருந்துகையால் வித்து வேர் கிழங்கு கொம்பு கொடி கொழுந்துகளிலே மரம் செடி கொடி கிழங்கு முதலிய தாவரங்கள் அவற்றை மேற்பிளந்து பிறக்கும். இங்ங

ணங்கூறிய தாவரங்க ளெல்லாவற்றுள்ளும் அரியன யவைமுதல் செங்கெ லீறாகிய பதினெண் வகைத் தானியங்களாம். அவைகளை அறுத்துப் பிறகு அரிசியாக்கி நானாவிதங்களான பாகத்தைச்செய்ய, அவைகள் நாசத்தையடையும், அவைகளைப் பூமியின்கணுள்ள ஆன்மாக்களெல்லாம் பசிப்பிணிக்குச் சிறந்த ஔடதமாகக் கொள்ளுகின்றன. . மற்றை வரகு கேழ்வரகு சாமை கம்பு சோளம் முதலிய தானியங்களெல்லாம் ஒரு விதத்தினாலே தாழ்ந்த உணவுகளாம்.

பின்பு, தானியங்களாலாகிய அரிசியையும் அதனாலாகிய மாவின் பேதத்தையும் நீருடன் கூட்டி அக்கினியிற் பாகம்பண்ண அன்னம் அபூப முதலிய பல வுணவுக ளாகின்றன. ஆபூபம்—அப்பவர்க்கம். அவைகளை உண்டு சலபானம்பண்ண, அவைகள் அமர்வாசயம் பகிர்வாசயம் சலவாசயம் மலவாசயம் சுக்கிலவாசயம் எனச்சொல்லப்படும் பஞ்சாசயங்களுட் டலைமையாகிய அமர்வாசயத்திற்றங்கிப் பின் நாபிக்குமேலுள்ள பக்குவாசயத்தி லிறங்கும். அவற்றுடன் பிராணவாயு கலந்து அன்னத்தையுஞ் சலத்தையும் வேறு பிரித்து அன்னத்தை மேலுஞ் சலத்தைக் கீழுமாகப்பிரிக்கும். பின்பு அந் நீருக்கடியில் நாபியின்கணுள்ள அக்கினியானது நெற்பிரமாணம் அவைகளிற்பொருந்த, அதனை வாயுவானது குழற்கொண் டூதுவதைப்போற் சுவாலிக்கச்செய்து அதன்மேலாம் நீரும் அன்னமும் ஒக்கவெந்து பாகமாய்ப் பிண்ணாக்கு மெண்ணெயும் போலச் சாரமெனவும் மலமெனவும் இருவகையாகப் பிரியும். அங்ஙனமாய உதராக்கினி ஆனைமுதல் எறும்பீறாகவுள்ள எல்லாப்பிராணிக ளிடத்துஞ் சமமாகச் சுவாலிக்குமோவெனின்? ஆனை குதிரை இவைகட்கு ஓங்குட்டப் பிரமாணமும், கீழ்நோக்கும் நீண்ட வாலினையுடைய பசுக்களுக்கும், மேனோக்கும் குறுகின வாலினையுடைய நாய் பூனை முதலிய மிருகங்கட்கும் ஒரு நென்மாத்திரமும், காக்கை கோட்டான் கொக்கு முதலியவைகட்கு ஒரெள்ளு மாத்திரமும், கிருமி கீடம் முதலியவற்றிற்கு நெல்வால் நுனிமாத்திரமுமாக அக்கினியானது உதரத்தினின்றுஞ் சுவாலிக்கும்.

மேற்கூறிய மலமானது பன்னிருபேதமாக மாறி நவத்துவாரமுதலிய அவயவங்களின் வழியாகக் கண்ணினின்று பீளையாயும், செவியினின்று குறும்பியாயும், மூக்கினின்று சளியாயும், பல் நா இவைகளினின்று அழுக்காயும், நெஞ்சினின்று கோழையாயும், குதம் குறி இவைகளினின்று மலசலமாயும், நகங்களினின்று அழுக்காயும், சரீரத்தினின்று வேர்வையாயும், குதம் குய்யம் இவைகளினிடை நின்று வெறும் அழுக்காயும் வெளிப்படுவனவாகும்.

மேற்கூறிய அன்ன சாரமானது சரீர உற்பத்திக்குக் காரணமாகின்றது. எவ்வாறென்னில்? அவ் வன்னசாரம் இருதய கமலத்திற் சென்று சமானவாயுவுடன் கலந்து சரீரத்தின்கணுள்ள எழுபத்தீராயிரம் நாடித்துவாரங்கள் முழுதும் பரவும். அங்ஙனம் பரம்புமிடத்து வாயுவினால் வெப்பமடைந்து பன்னிரு பேதமாக மாறும். அவை வருமாறு: அன்னசாரத்தினின்று தோலும், தோலினின்று இரத்தமும், இரத்தத்தினின்று நிணமும் இறைச்சியும், இறைச்சியினின்று நரம்பும் மயிரும், நரம்பினின்று நாடிகளும், நாடிகளினின்று எலும்பும், எலும்பினின்று தசையும் நகமும், தசையினின்று சுக்கிலமுமாக மாறுவனவாம். சுக்கிலத்தையுடைய நாயகன் சுரோணிதத்தையுடைய நாயகியைக்கூடி அவளுடைய யோனியில் விடும் சுக்கிலமானது சுரோணிதத்தோடு கெற்பமுண்டாகும்.

இங்ஙனமாய கெற்பத்தில் புரியட்டகத்தோடு கூடிய ஆன்மா எவ்விதஞ் செல்கின்றன வெனின்? ஆகாயத்திற் சஞ்சரிக்கும் ஆன்மாவானது மேகத்துடன் கலந்து மழையாக வருஷிக்கப்பட்டு அம்மழை பூமியிற்றங்கி எருவுடன் கலந்து அவ்வெருமூலமாக யவை முதலிய தானியங்களிற் சேர்கின்றது. அவ்விதம் ஆன்மா சேரப்பெற்ற தானியங்களைப் பலவிதமான பாகஞ்செய்த நீருடன் கலந்து அன்னம் பானமாக ஒருவன் உட்கொள்ள, அவைகளின் மூலமாகப் புரியட்டக தேகத்தோடு கூடிய உயிர் சென்று அவனுதரத்தில் இரண்டுமாதந் தங்கிப் பின்பு அவனால் விடப்படும் சுக்கிலமானது நாயகியின் யோனியை யடைந்து சுரோணிதத்தொடு கலந்து அதற்கு வேறாய கெற்பாசயப் பையிற்றங்கி அவயவங்களெல்லா முண்டாகி ஒரு வடிவாகப் பூமியின்கட் பிறக்கும். பிறந்து வளர்ந்து இறக்கும்.

இங்ஙனமாகிய பிறப்பில் ஆண் பெண் அலி இரட்டை ஊமை மந்தம் முதலிய வேறுபாடுக ளுடையனவாகும். அவையாமாறு: கெற்பமுண்டாதற் கேதுவாய சுக்கில சுரோணிதக் கலப்பில், சுக்கிலமதிகமாயின் ஆணும், சுரோணித மதிகமாயிற் பெண்ணும், இவ்விரண்டுஞ் சமமாயின் அலியும், சுக்கில சுரோணிதக் கலப்பில் பிராணவாயு மோதி இரண்டாய்ப் பிரியில் இரட்டைப் பிள்ளையும், கருப்பாசயப் பையை யடைந்த பிண்டம் நீர்வழியே வளரில் ஊமையும், மலவழியே வளரில் மந்தமுமாகப் பிறக்கும். இப்படிப் பிறக்கும் ஆன்மாக்களின் குணம் தந்தை தாயாகிய இருவருங் கலங்குங் காலத்தில் அவர்களுக் குண்டாய குணம் எதுவோ அதுவேயாகும். புரியட்டக தேகமாவது, மனம் புத்தி ஆங்காரம் தன்மாத்திரை யைந்தாகிய இவ்வெட்டனோடுங் கூடிய தேகமாம்.

முற்கூறிய கருப்பாசயப் பையிற்றங்கிய சீவன் தான் முன் செய்த கன்மத்துக்கீடாக மாதாவாற் றாங்கப்பெற்று ஒருகணத்தில் இரண்டு திரிசரேணுப் பருமையாயும், ஒரு நாழிகையிற் பேனளவாயும், முதற் றினத்திற் குன்றுமணியளவாயும், ஐந்தாம்நாளில் நீர்க்குமிழி யளவாயும், ஏழாம்நாளில் இளஊனாயும், பதினான்காம்நாளில் இரத்தம் பரந்து நிறைந்த திரண்ட ஊனாயும் உருக்கொள்ளும். பின்பு இருபத்தைந்தாம் நாளிற் பீசமும், முப்பதாம் நாளிற் சிரசு கண்டம் பிடரி முதுகெலும்புகளும், இரண்டாம் மாதத்தில் கை கால் இடுப்பு விலாப்புறம் உள்ளங்கால்களும், மூன்றாமாதத்தில் ஒன்றோடொன்று பொருந்துந் தானங்கள் இருபத்தெட்டும், நான்காமாதத்தில் விரல்களும், ஐந்தாம் மாதத்தில் முகம் நாசி கன்னம் குய்யம் நகம் பற்களினான் வரிசைகளும், ஆறாமாதத்தில் செவித் துவாரங்களும், ஏழாமாதத்தில் குறியும், எட்டாமாதத்தில் குதம் கொப்பூழும், சந்தி பேதங்களும், ஒன்பதாமாதத்தில் தலைமயிர் முதலிய அவயவங்களும், பிராணன் அபானன் உதானன் சமானன் வியானன் என்னும் ஐந்து வாயுக்களும் உண்டாகப்பெறும்.

திரிசரேணுவை என்பது மூன்று பரமாணுக்கள் சேர்ந்தது.

பின்பு மாதா உண்ணும் உணவினின்று அறுசுவையும், முறையாக ஏரியினின்று வாய்க்கால் வழியே நீர் புறப்படுவதுபோலக் கெற்ப நாபிச் சூத்திரத் துவாரத்தாலே சிறுகச்சிறுக அதன் வயிற்றிற் போய்ப் பொருந்தப்பெறும். அதனால் அச்சீவனுக்கு மனம் புத்தி அகங்காரம் சித்தம் ஆகிய கரணங்கள் உண்டாகும். அவற்றாலே சீவன் சுக துக்கங்களை அனுபவிக்கும். இனி, அதன் புத்தியிலே, முன் செய்து போந்த புண்ணிய பாவங்கள் சொப்பனம் போலத் தோற்றும். அப்போது அதனிடத்துண்டாய அஞ்ஞானம் நீங்கும். அப்பொழுது அக்கெற்ப ஆன்மாவானது முன்னெல்லாம் இறைகூடைச் சலம்போல அநேக சனனமெடுத்திறந்தோம். இனியும் பிறந்து திரிவோம். அதனாலாகுந் துன்பத்துக்களவில்லை. ஆகையால், இக்கெற்பத்தினின்றும் பூமியிற் பிறந்தவுடன் சிவனது திருவருளினாலே ஞானாசாரியர் திருவடியை யடைந்து வேதாகமங்களை ஐயந்திரிபற வுணர்ந்து சிவஞானத்தாலே ஆதியு மந்தமுமில்லா அருட்சிறப்பினையுடைய சிவனது சொரூப வியலையறிந்து அவலமாகிய பிறப்பை யொழிப்போமெனச் சிந்தித்துக்கொண்டு இனிப்பாற் சுக்கிலமும், புளிப்பால் மச்சையும், உப்பால் என்பும், கைப்பால் மேதையும், காழ்ப்பால் தசையும், துவர்ப்பால் இரத்தமுமுண்டாகி வளரும்.

இவ்வாறு வளரும் உயிரை அக்கெற்பாசயப் பையானது பெரிய மலைக்கீழகப்பட்டு நசுங்குபவனைப்போல நசுக்கி மிகத் துயருட்படுத்தி

மனமழிந்து சோர்வடையச் செய்யும். அஃதன்றியும் கருப்பாசயவெள்ள நீரில் மிதக்குங் கெற்பம் கடலில் மிதந்த கப்பல் கவிழ்ந்த அக்காலத்து அதிற்றங்கிய ஆன்மாக்களின் றுயரைப் போலத் துக்கித்து மதிமயங்கும். இஃதன்றியும் அக் கெற்பமானது மாதாவின் உதராக்கினியாற் சுடுண்டு தீயினின்று நீங்கா இருப்புக் குடத்திற்றங்கிய மனிதனைப்போல வருந்தும். அல்லாமலும் பழுக்கக் காய்ச்சிய இருப்பூசியாற் றுளையுறும் மனிதன் அடையுந் துக்கத்தினும் எண்மடங் கதிகமாக அவதிப்படும். இவ்வாறு கருப்பாசயப் பையிற்றங்கி அனுபவிக்குந் துக்கத்திற்கு அளவேயில்லை. பின்பு வியானனென்னும் வாயு கருப்பாசயப் பையுட் பிரவேசித்து அவ்வுடலை மடக்கித் தலை கீழாகத் தள்ளும். அப்பொழுது அக் கெற்பத்திற்றங்கிய உயிரானது வலிகுன்றி மயக்கமதிகரித்து அஞ்ஞானத்திற்றலைப்பட, முன்னுணர்வும் அந் நிலையுங் கெட்டு ஆலையிலகப்பட்ட கரும்புபோல மாதாவின் யோனியந்திரத்தில் நெருக்குண்டு அச்சரீரத்துடன் பூமியின்கட் பிறக்கும். இங்ஙனம் பிறந்த பின்னர்ச் சூக்கும உடல் காரணமாகத் தோன்றிய தூல தேகத்தை உயிரானது தானெனத் தபிமானித்துப் புண்ணிய பாவங்களைச் செய்து அவற்றின் பலன்களை மேலெடுக்கும் பிறப்புக்களில் முறையாக அனுபவித்துப் பின்னும் அதனாலுண்டாகிய தேகங்களோடு யானெனதென்னுஞ் செருக்குற்று அதனாலே புண்ணிய பாவங்களைத் தேடி இறைவனது திருவடி புகுங்காறும் பிறந்திறந்துழலும் என்க.

"சூக்கும வுடலைப்பற்றியே யெழுந்த தூலதே கத்தினுண் முன்ன
ராக்கிய வறம்பா வங்களின் பயனை யவ்வினை யெனப்பின்பு பயக்கு
நீக்கரும் வினைகள் வளாவியா னென்னுஞ் செருக்கினு னித்தலு மருந்திப்
போக்கொடு வரவிற் படுமுயி ரிறைவன் பொருவில்பா தம்புகு காறும்."

(இன்னும் வரும்.)

சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலை
ந. கண்ணுச்சாமிப்பிள்ளை.

முத்தபுரி இரகசியம்.

(உடையார் பாளையம்)

(வெண்டாமரை ௫, இதழ் ௧௦, 204-ம் பக்கத் தொடர்ச்சி.)

பெரியசாமிகோயில்:— இக் கோயிலில் உற்சவத்தின்போது ஆவேசம் வந்து சுமார் 3 மணிநேரம்வரை தேங்காய்கள் தலையில் உடைக்

சப்படுகின்றன. இன்னுமொன்றதிசயமின்றி யாருடைய தலையில் வேண்டுமானாலும் தேங்காயை ஆவேசம் வந்தவன் உடைக்கிறான். சுமார் 100 தேங்காய்கள் வரை ஒருவன் தலையில் உடைக்கப்பட்டும் அவனுக்குச் சிறிதேனும் சிரமமே யுண்டாவதில்லை. (இந்த ஆச்சரியகரமான வைபவம் நேரில் எம்மால் கண்டு களிக்கப்பட்டது.)

தீர்த்தங்கள்:—காண்டீப தீர்த்தம் எனக் காரணப்பெயர் பூண்டதோர் தீர்த்தம் ஸ்ரீ பயறணீசுவர சுவாமி கோயிலுக்கெதிரிலுள்ளது. சுமார் 20 ஏகர் விஸ்தீரணமிருக்கும். இதை முன்னிட்டே இதற்குப் பெரிய குளம் என்றும் பெயர் வழங்குகிறது. ஜலம் எக்காலத்தும் வற்றுவதேயில்லை. ஜலமோ மிக்க குளிர்ச்சி. நான்முகன், குஜன், விஜயன், ஸ்ரீராமர், ஜமதக்கினி இவர்களால் இறைவனைப் பூஜித்த காலத்தில் உண்டாக்கப்பட்ட தீர்த்தங்களாகிய கூபங்களடங்கப்பெற்றது. பாண்டு குல திலகனாகிய பல்குனன் ஒரு காலத்தில் இந்தஸ்தலத்திற்கு வந்தபோது, அப்போதுபத்திராரணியமென்னும்காடாயிருந்தமையாலும்,தான் சிவதரிசனம், பூஜையில்லாது உண்ணுத விரதமுடையவனானதாலும்என்செய்வதென்று வருந்தியபோது, கருணாநிதியருளால் பிரமதேவன் பூஜித்து முன் வரம் பெற்ற மகாலிங்கத்தைக் கண்டு மகிழ்ந்து, ஸ்நாநம் செய்து பூஜை செய்வதற்குத் தீர்த்தமில்லாமை கண்டு தன்னுடைய காண்டீபத்தால் பூமியில் அடித்த உடன் தீர்த்தமுண்டாக, வழக்கப்படி பூஜை முதலியது முடித்துக்கொண்டு எம்பெருமானைத் தரிசனம் செய்து வந்தான்.

“காண்டீபர் தனைக்க ரத்தி லெடுத்தது கருவி யாகத்
தோண்டுற நதியாற் றுத்தி மண்ணினைத் துகளாம் வண்ணங்
கிண்டியவற் றிட்ட தாலே கெழுமிய விதற்கு நாமங்
காண்டீப தீர்த்த மென்றே கழறுவர் பலரு மம்மா.”

என்றபடி, காண்டீபத்தால் உண்டாகிய தீர்த்தமானதால் காண்டீப தீர்த்தமெனப் பெயர் வழங்கப்பெற்றுவருகிறது. இத் தீர்த்தத்தில் மூழ்கியதால் வேதாள உருவம் நீங்கி இயற்கையுருவமடைந்தும் இன்னும் மற்றுர்ச் செய்கை செய்தோர் நற்கதியடைந்துமிருக்கிறார்கள்.

ஜமதக்கினி மகா முனிவர் இந்தத் தீர்த்தத்தின் கரையில் தவம் செய்துகொண்டிருந்தபோது, தவளைகள் சப்தம் செய்ய, அதனால் தவத்திற்குப் பங்கம் வந்ததென்று கோபித்து, இனி இத் தீர்த்தத்தில் தவளைகளே இல்லாமற் போகக் கடவதெனச் சபித்ததாகவும், அதுமுதல் தவளைகளே கிடையாதெனவும் தெரிகிறது. இத்தீர்த்தமானது பார்வைக்கு ஒருவாறு தனுசைப்போலவே தோன்றுகிறது. பெருமையும் கீர்த்தியும்

வாய்ந்த அத்தீர்த்தத்தின் மத்தியில் மிகவும் உன்னதமான நீராழி மண்டபமொன்று சந்நிதிக்கு நேராக அமைக்கப்பெற்று நான்கு பக்கங்களும் கல்லுகளால் படிக்கட்டுகள் கட்டப்பட்டுமிருக்கிறது. இவ் வூரிலுள்ளோர்களுக்கு ஸ்நானபானத்திற்கு இது ஒன்றே மிகவும் சிறந்தது. இத் தீர்த்தத்தையும், சிவன் கோயிலையும் பற்றிய அநேக பூர்வீக சின்னங்கள் இருந்தபோதிலும் அவற்றுள் சிலவற்றைமட்டும் சொல்லுவாம்.

ஷை தீர்த்தத்தின் மேல் கரையில் மேற்குறிப்பிட்டுள்ள சுருக்கமான கதையில் தெரிவித்தவாறு, பார்த்தன் தீர்த்தம் உண்டாக்குமாறு தன்னுடைய காண்டீபத்தால் பூமியில் அடித்த வுடன் ஜலம் பெருகிப் பெரிய தடாகமானதைக் கண்ணுற்றதும், நம்முடைய காண்டீபத்திற்கு இவ்வளவு சக்தியிருக்கிறதேயென்றும், பின்னல் வேதாளவுருவாகிய அரசன் அத்தடாகத்தில் மூழ்கியதின் பயனாக உடனே அழகு வாய்ந்த அரச உரு அடைந்தமையும் கண்டு ஓர் மமதை கிரீடிக்கு உண்டாகவே, அடிக்கப்பட்ட காண்டீபமானது வளையாது நிமிர்ந்தபடியே இருத்தல் கண்ட அர்ச்சுனன், திகைத்து இறைவனைப் பன்முறை தன் குறைகளைப் பொறுத்துக் காத்தருள்புரியவேண்டுமென் றிறைஞ்ச, விநாயகர் வந்து ஷை வில்லை வளைத்துக் கொடுத்ததாகச் சொல்லப்படுகிறது. அதற்கிணங்கவே வில் வளைத்த பிள்ளையார் என்று பெயர் பூண்ட விக்கினேசுவரர் ஆலயமொன்று இருக்கிறது. அந்த விநாயகர் கையில் வில்லைப் பிடித்தவண்ணமாயிருக்கிறார். அதற்குப் பக்கத்தில் ஸ்ரீ பயறணீசுவரர் ஆலயமும், கலகக் காலத்தில் காஞ்சிபுரத்திலிருந்து காமாக்ஷி அம்மை வந்திருந்ததாக அதற்காகக் கட்டப்பட்ட காமாக்ஷி அம்மை மண்டபமொன்றுமிருக்கிறது. சமஸ்தானம் அந்தப்புர ஸ்திரீகள் அசுவத்தப் பிரதக்ஷணம் செய்யும்பொருட்டு ஏற்பட்ட ஓர் அரசமரம் பக்கத்தில் மதில்களால் சூழப்பட்டிருக்கிறது. தர்மபுர ஆதீனத்திற்குச் சொந்தமான பெரிய மடமொன்று பக்கத்தில் நந்தவனத்துடனிருக்கிறது. வடகரையில் தன் இன்னுயிர்க் காதலன் உயிர் துறந்தவுடன், உடன் கட்டையேறிய கற்பிற் சிறந்த கனகம்மாள் கோயிலொன்றும், ஷை அம்மாளின் ஞாபகார்த்தமாக ஏற்பட்ட அக்ரகாரமொன்றும் இருந்ததாகவும், இப்பால் இருபது வருஷங்களுக்கு முன் ஷை அக்ரகாரம் முழுவதும் அழிந்து போனதாகவும் தெரிகிறது. இன்னும் அதற்கு அறிகுறியாக இடிந்த சுவர்கள், கட்டடங்களிருப்பதைப் பார்க்கலாம். ஷை கனகம்மாள் ஆலயத்திற்கு வெகு நாளாக மங்கைப் பருவ மடையாமலிருக்கும் கன்னியர்கள் போய்ப் பிரார்த்தனைசெய்துகொண்டவரின் மங்கைப்பருவம்உடனே அடைவதாய்த் தெரிகிறது. கீழ்க்கரையில் அம்பல சாவடி ஒன்றும்,

கன்னுங்குளம் பிள்ளை அவர்களின் மடமும் நந்தவனமும் க்ஷீண தசையி லிருந்துகொண்டிருக்கின்றன. ஸ்ரீ முத்தபுரீசுவரர் சந்நிதிக்கு எதிராக ஓர் விக்கினேசுவரர் ஆலயமும், வைசியர் முதலியோர் அசுவத்தப் பிரதக்ஷணம் செய்ய ஓர் அரச மாமு மிருக்கின்றன. இன்னும் அநேக பூஜை மடங்களும், நந்தவனங்களும், தோப்புகளும் சூழப்பெற்றிருக்கிறது. தென்கரையில் நீண்டதோர் அக்ரகாரமும், பிராம்மணர் பிரதக்ஷணம் செய்ய வெகு நீண்ட காலமாயுள்ள ஒரு அசுவத்த விருக்ஷமும், சமஸ்தானம் அன்னசத்திரமு மிருக்கின்றன. சமஸ்தானத்தால் தினந்தோறும் வரும் பிராமணர்களுக்கு அறுசுவையுடன் அன்னமளிக்கப்பட்டுவருகிறது. வருடந்தோறும் தெப்போற்சவம் நடத்துவதற்காக ஆயிரக்கணக்காய்ச் செலவழித்து மிகவும் வேலைப்பாடான தெப்பம் சமஸ்தானத்தால் சித்தம் செய்து வைக்கப்பட்டிருக்கிறது. இவையன்றி, பெருமாள் கோயிலுக்கெதிரில் பெரிய புஷ்கரணியும், அரண்மனைக்குப் பக்கத்தில் ரெங்க சமுத்திரம் என்னும் பெரிய ஏரியும், இன்னும் அநேக ஏரிகளுமிருக்கின்றன.

(தொடரும்.)

S. V. G. பாலன்.

அரச வாழ்த்து.

இருவே றுலகத் தியற்கையோ டிகலித்
திருமக ளொடுகலைச் செல்வியு மேவரு
மிங்கிலாண் டெனுநகர்க் கின்னர சாகிப்
பல்வளங் கனிந்த பாடல்சால் சிறப்பிற்
புண்ணியம் பூத்த பாரத முழுவது
மொருகுடை நிழற்றி யொண்கோ லோச்சி
மாட்சியின் மேம்படு மன்னர்மன் னவனைப்
பன்மணிக் கோவையும் பாமா லையுந்திகழ்
வரைபுரை வென்றி மல்லலந் தோண்மிசைப்
பரித்த நமக்கே யுரித்தெனக் கருதித்
தாயினு மினிமை மேவிய வன்பொடு
அருளும் பொறையு நிறையு மேற்கொடு
மேல்கீ ழென்னப் பால்வகை நாடா
தருந்துலை யென்ன வொருதா னகி –

ஆட்சி புரிதா மாட்சிசால் டேல்லி
மாநக ரஞ்செய் வயங்கெழு தவத்தாற்
சிங்கஞ் சுமந்த பொங்கெழிற் றுவசம்
வெற்றிடை யின்றி விண்ணகந் தூர்ப்ப
எம முரச மிழுமென முழங்கப்
பார்த்திப ரெவரு மேத்தினர் சூழ
ஆயிடைப் பன்மணி மேவரக் குயிற்றி
ஐவே றுருவிற் செய்வினை முற்றிய
முடிபுனை வாழ்க்கை வள்ளல் தொடிபுனை
திருவச் செல்வியி னுருகெழு மேரி
யன்னை துணைவன் முன்னையெம் மறமெலா
மோருருக் கொண்டென வுற்றஜார்ஜ் மன்னன்
செற்ற நீங்கிப் பற்றலர் பணிய
எல்லையி னிடனெலாம் பல்புகழ் பரப்பி
நீடிய ஆயுளுங் கேடில் செல்வமும்
கோயில் வாழ்க்கையும் பெற்றுச் சாய்விலாச்
செங்கோ னடாத்திப் புங்கவ னருளால்
ஆழிசூ ழுலகெலாம் வழுத்த
வாழி! வாழியர்!! நீடுவாழ் குகவே!!!

கரந்தை—T. S. முருகேசன்,
முத்துப்பேட்டை.

தமிழ் மருத்துவப் பெட்டி.

(பதார்த்தகுண சிந்தாமணி.)

நீராகார நீரின் குணம்,

வெண்பா.

வாதபித்த வைய வறட்சிகளை மாற்றிவிடும்
தாதுவுமுண் டாக்குந்தா கம்போக்கும் — மாதர்மெச்ச
வாராகா ரங்கொடுக்கு மாமதுரத் தைக்கொடுக்கும்
நீராகா ரத்தெளிவு நீர்.

இ—ள். மிகு மதுரமான நீராகாரத் தெளிசலமானது, வாத பித்த சிலேற்பன வறட்சிகளையும், தாபத்தையும் போக்கும். சுக்கிலத்தையும், அழகையும் விருத்திசெய்யு மென்க.

ஊணுக்கு முன்பு பின்பு நடு இக்காலங்களில் அருந்தும் வெந்நீரின் குணம்.

ஊணுக்கு முன்புவெந்நீ ருண்டக்காற் றீபனம்போம்
ஊணுக்குப் பின்பருந்தி லூதியமாம் — ஊணுக்குப்
• பாதியிலுண் டாற்பசியும் பாதியாம் வெந்நீரே
ஓதுசுர வாதமகற் றும்.

இ—ள். உணவுக்கு முந்தி வெந்நீரைக் குடித்தால் பசி மந்தப்படும். உணவுக்குப் பிந்தியுண்டால் நன்மையுண்டாம். உண்ணும்போது மத்தியிலருந்தினால் பசியும் மத்திபமாம். மேலும் வெந்நீரின் சுபாவம் வாத சுரத்தை நீக்கும் என்க.

வாழை மரத்தின் தண்டு, பூ, பிஞ்சு, காய் இவற்றின் குணம்.

நற்கதலிக் கந்தமன லாரார்தண் டோகுடலிற்
சிக்குமயிர் தோனஞ்சுந் தீர்த்திடுங்காண் — தொக்குறுபூ
மேகமொழிக் கும்பிஞ்சால் வெங்கடுப்பே குங்காயால்
தேகமுழு துங்காலாந் தேர்.

இ—ள். கிழங்கிற் சூடுள்ள நல்ல வாழைத் தண்டு, குடலிற் சிக்கிய மயிர், தோல்விஷம் இவைகளை விடுவிக்கும். பூ, பிரமேகத்தை நீக்கும். பிஞ்சினால் மூலக் கடுப்பு நீங்கும். காயினால் உடல் முழுதும் வாயுவாம் என்க.

முருங்கை மரத்தின் பிஞ்சு, பூ, இலை, பட்டை, வேர் இவற்றின் குணம்.

பிஞ்சாற் றிரிதோஷம் பேரும்பூ வாற்போகம்
உஞ்சுவிழிக் குக்குளிர்ச்சி யுஞ்சேரும் — பிஞ்சிலைவெப்
பாற்றுந்தோ னஞ்சறுக்கு மவ்வேர்வா தச்சினத்தை
யாற்று முருங்கை யது.

இ—ள். முருங்கையின் சிறிய பிஞ்சால் திரி தோஷம் நீங்கும். பூவால் புணர்ச்சியில் வன்மையும், கண்ணுக்குக் குளிர்ச்சியும் உண்டாம். இலை சுரத்தையும், பட்டை விஷத்தையும், வேர் வாத கோபத்தையும் போக்கும் என்க.

மத்தியான காலக் கறிவகை.

(தேரையர்.)

கந்த வருக்கங் கனிவருக்கம் வாதமெழு
மந்த வருக்கமாந்த மாம்வருக்கம் — கந்தமுறு

தண்ணடைவ ருக்கந் ததிமோ ரிவையெந்நா
ளுண்ணடையாற் றோடமறு மோர்.

இ—ள். மத்தியான போசனத்தில், கிழங்கு வகைகள், பழவகைகள், வாத வஸ்துக்கள், மந்த பதார்த்தங்கள், மணமும் குளிர்ச்சியுமுள்ள இலைக் கறிகள், எருமைத் தயிர், மோர் முதலியவைகளை உண்ணினும், சூரிய வெப்பத்தினாலும், தேக உழைப்பினாலும் அவைகளின் தோஷம் நீங்கும் என்க.

இராக் காலக் கறி வகைகள்.

(தேரையர்.)

அவரைப்பிஞ் சத்திக்கா யாப்பான் முருங்கை
துவரைப் பருப்பாற்றுத் தோணி — யெவரையுமோ
கண்டா லிழுக்குங் கடத்தூ துணமிவையல்
லுண்டா லிழுக்குமிலை யுண்.

இ—ள். அவரைப் பிஞ்சு, அத்திக்காய், பசுவின் பால், முருங்கைப் பிஞ்சு, துவரைப் பருப்பு, ஆற்று முள்ளிக் காய், யாரையும் முட்களாலிழுக்கின்ற காட்டுத் தூதுளங்காய் முதலியவைகளை மாலைக் கறிகளாக வுண்ணில் குற்றமின்று என்க.

பல் விளக்கத் தக்க கோம்புகள்.

வேலுக்குப் பல்லிறுகும் வேம்புக்குப் பற்றுலங்கும்
பூலுக்குப் போகம் பொழியுங்காண் — ஆலுக்குத்
தண்டா மரையாளுஞ் சாருவளே நாயுருவி
கண்டால் வசீகரமாங் காண்.

இ—ள். கருவேல் குச்சால் பற்களுக்கு உறுதியும், வேப்பங் குச்சால் பற்களுக்கு ஒளியும், நீர்ப் பூலாக் குச்சுக்கு வீரிய விருத்தியும், ஆலம் விழுதுக்கு இலட்சுமி கடாட்சமும், நாயுருவி வேருக்கு முக வசீகரமும் உண்டாம் என்க.

பல் விளக்கத் தகாத பொருள்கள்.

கல்லு மணலுங் கரியுடனே பாளைகளும்
வல்லதொரு வைக்கோலும் வைத்துநிதம் — பல்லதனைத்
தேய்த்திடுவா ராராயிற் சேராளே சீதேவி
வாய்த்திடுவண் மூதேவி வந்து.

இ—ள். செங்கல் மா, கரி, தென்னம் பாளை, வைக்கோல் இவைகளால் தினமும் பல் துலக்குபவரிடத்தில் இலட்சுமி நீங்கி மூதேவி சேர்வாள் என்க.

புகையிலையின் குணம்.

மருந்தை முறித்துவிடும் வாய்வறளச் செய்யும்
திருந்து பலவீனம் சேர்க்கும் — பொருந்துபித்தம்
உண்டாக்கும் விந்தழிக்கு மோது புகையிலையைக்
கண்டார்க்கு மாகாது காண்.

இ-ள். புகையிலை வாய்வறட்சி, துர்ப்பலம், பித்தாதிக்கம், சுக்கில அழிவு இவைகளை விளைக்கும். நல்ல மருந்தை முறிக்கும் என்க.

ஓர் மருத்துவன்.

சுவிவேக தருப்பணம்.

ஸ்ரீ சாந்தாநந்த சரசுவதி சுவாமிகள் ஆந்திர மோழியில் அருளியது.

(வெண்டாமரை ௫, இதழ் ௧௦, 210-ம் பக்கத் தொடர்ச்சி.)

13. விட்டில், தகுதி தகுதியின்மைகளை அறியாமற்போவதனாலே இராத்திரி வேளையில் தீபத்தைப் பார்த்துப் பிரமித்து அதில் வீழ்ந்து அழிவதுபோல, தக்கது தகாதென்ற விசாரணையின்றிய மந்த புத்தியுள்ளவர், அந்நிய மாதர்களுடைய சிங்கார சேட்டைகளையும் பாவத்தையும் சாமர்த்தியத்தையும் கண்டு பிரமையடைந்து இரௌரவ முதலிய நரகங்களில் வீழ்வாரென்று தெரிந்து நடத்தல் வேண்டும்.

14. தேனி, தானுண்ணாமலும் சேர்த்துவைத்த தேனைப் பிறர் கொண்டுபோக இழந்து கெட்டுப்போதல்போல, கடும்பற்றுள்ளத்தினாலே பிரவர்த்திப்பவன் அழிவானென்று தெரிந்துகொண்டு, கிடைத்தவற்றில் மகிழ்ச்சியடைந்து அதனைத் தானும் அனுபவித்துப் பிறவுயிர்கட்கும் உபயோகப்படுத்திச் சுகமாக நடத்தல் வேண்டும்.

15. வண்டு, பலவித மலர்களினிடத்துப் பலவித இரசங்களைப் பானம்பண்ணி மகிழ்ச்சியடைவதுபோல, முமுட்சுவானவன் எப்போதும் உபநிடத இரசியார்த்தங்களைக் கிரகித்து மகிழ்ச்சியடைதல் வேண்டும்.

16. யானை, பெண்யானையோடு புணர்ச்சி யின்பத்திற்குத் தலைப்பட்டு மனிதர்களிடம் அகப்படுவதுபோல, பிறமாதர் பரிச சுகத்திற்கு ஆசைப்பட்டால், மோக பாசத்தால் கட்டுப்பட்டுத் தண்டனைக்கு உட்பட வேண்டிவரும் என்று தெரிந்துகொள்ள வேண்டியது. பிறர் தாரங்களைத் தாயைப்போல் கருத வேண்டும்—என்ற பிரமாணத்தின்படி நடந்துகொள்ளவேண்டும்.

17. மான், செவிக்கின்பமாகக் கேட்கப்பட்ட இராகத்திற்கு மோகமுற்று அகப்பட்டுக்கொள்வதுபோல, முமுட்சுவானவன் கிராமிய சங்கீதங்கட்குச் செவிகொடுக்கும்பட்சத்தில் கெட்டுப் போகவேண்டி வரும்.

18. மீன், தூண்டில் முள்ளில் கோத்துள்ள உணவுக் காசைப் பட்டுத் தன் உயிர்க்கு முடிவை வருவித்துக் கொள்ளுவதுபோல, நாவின் சுவையிலகப்பட்டு, சுவையுள்ள பதார்த்தங்களை விரும்பினால் துன்பத்திற்கு இரையாகவேண்டிவரும் என்று தெரிந்துகொண்டு விழிப்படைதல் வேண்டும். நாவின் சபலம் எதுவரையும் விடாதோ அதுவரையும் விடய சாபல்லியங்கள் முற்றும் விடமாட்டா. சுவைப் புலன் ஒன்று வெல்லப் பட்டால் மற்றைய புலன்களெல்லாம் எளிதாக வெல்லப்படும். நன்னெறியிற் பயிலும் நல்லவனாயினும் நாவின் சபலத்திற்குச் சிறிது அகப்பட்ட விடத்து, ஏனைய இந்திரியங்களெல்லாம் வன்மைபெற்று அவன் மனவன்மையை அழித்துவிடும். சுவை பக்குவங்களைச் சிறிதும் ஆராயாமல் உணவைக் கொள்ளுமிடத்துப் பொறிகளனைத்தும் தனக்கு வசமாகும். பிணி நீங்குதற்பொருட்டு மருந்தைக் கொள்ளுதல் போல, உடம்பு நிற்றற்பொருட்டு முக்கியமாக உணவைக் கொள்ளல் வேண்டும். உணவை முற்றும் விட்டுவிட்டால், உடம்பு அன்னமய மாதலினாலே அது வலியற்றதாகும். வலிமை குறைந்தாலோ மதி குறைவுற்று மனத்திடன் கெட்டுப்போம். மனத் திடன் கெட்டால், மேல் ஆன்ம அனுசந்தானம் மெத்தென நடைபெறாது. ஆன்ம அனுசந்தானம் இல்லாமற் போனால் கடைத்தேறுதற்கு வழியுண்டாகமாட்டாது. ஆதலின், உடம்பு நிற்றலி னிமித்தம் உணவைக் கொள்ளுதல் வேண்டும்.

(வரும்.)

குருபாதசேகரன்.

முக்திகோபநிஷத்.

(வெண்டாமரை ௫, இதழ் ௮-௧, 183 - ம் பக்கத் தொடர்ச்சி.)

(வாசனைக்கு இலக்கணம் கூறுகின்றார்.)

௯௧. நெடுநாட் பழக்கத்தாலான மலின சம்ஸ்காரத்தினாலே விடப்பட்ட பூர்வோத்தர விசாரங்களை யுடையதாய் வஸ்துவினுடைய எந்த சுவீகாரமுண்டோ அது வாசனையென்று சொல்லப்படுகின்றது.

இச் சமுசார அனுபவம் அநாதி காலத்திலிருந்து திடமாகப் பழகப்பட்டதாதலின், முன்னெதுவோ பின்னெதுவோ என்னும் விவேகமின்றி, மீண்டும் அதையே நம்பி அந்த ஸ்திதியிலேயே மனசையும் அதன் சம்ஸ்காரங்களையும் பரிக்கிரகித்தலே வாசனையென்று பெரியோர் சொல்லுவரென்க. சம்ஸ்காரம்—முன்னனுபவித்தது நினைவிற்கு வருதல்.

௬௦. ஏ வானரோத்தமா! தன்னால் தீவிரமான வேகத்தினாலே எது தியானிக்கப்படுகின்றதோ, போக்கடிக்கப்பட்ட இதர வாசனைகளையுடையவனாய் அந்த தியானிப்பவன் விரைவில் தியானிக்கப்பட்ட அவ்வஸ்துவின் சொரூபமேயாகின்றான்.

எவன் தீவிரமான சம்ஸ்காரத்தினாலே இதர வாசனைகளில்லாதவனாய் எதைத் தியானித்துக்கொண்டிருக்கின்றானோ அதை அவன் சீக்கிரமாக அடைகின்றானென்க.

௬௧. வாசனாசொருபனாய் வாசனைகளினாலே அவசமாகச் செய்யப்பட்ட புருஷன், எந்த வஸ்துவை நன்றாகப் பார்க்கின்றானோ அதுவே நல்ல வஸ்துவென்று மோகிக்கின்றான்.

ஒரு புருஷன் தன்னுடைய சம்ஸ்காரங்களைப் பரிகரித்துக் கொள்ளாதவனாய் எதை நன்றாகத் தியானிப்பானோ அதுவே நல்லதென்று மோகங்கொள்ளுகின்றான். நூறு ஜன்மங்களானாலும் அவன் முக்தி மார்க்கத்தை யறியமாட்டானென்க.

௬௨. அப் புருஷன் அதி தீவிரமான வாசனைகளினுடைய விசித்திரங்களினாலே வாசனா வாசிதமான தனது ரூபத்தை விடமாட்டான். பாரமார்த்திகமான விவேகமில்லாதவனாய் மதத்தினால் எல்லாவற்றையும் பிராந்தமானதாகப் பார்க்கின்றான்.

சரீராதிகளில் ஆத்ம புத்தியுள்ள பாமரன் பிரபலமான கர்ம சம்ஸ்காரங்களினுடைய லேசத்தினாலே தன்னுடைய பிராந்தியைத் தான் விடாமல், நித்யாநித்ய வஸ்து விவேகமில்லாதவனாய், தனது அவிவேகத்தை எல்லாவற்றினிடத்தும் ஆரோபித்து, எல்லாம்பிராந்திமாத்திரமேயென்று மதத்தினாலே தன்னைப்போலவே பார்க்கின்றான்.

மஞ்சட் காமாலையுள்ள கண்ணுடையவன் எவற்றையும் மஞ்சளாகப் பார்ப்பது போலவும், மத்யபானம் பண்ணினவன் மெய்ம்மறந்து எவரையும் தன்னைப் பார்ப்பது போலவும் பார்ப்பன் என்க.

(வரும்.)

ஓர் ஆரியன்.

சிதம்பரம்

ஸ்ரீ சபாநாயகர் திருவநந்தல் காலைச்சந்தி கட்டளை

மகா வித்துவான்

வேல்லப் பிறந்த – தில்லைநாயகமுதலியார் அவர்கள்

பிரிவிடையாற்றுப் பேதுறுகலுழ்ச்சி.

(வெண்டாமரை ௫, இதழ் ௧௦, 212–ம் பக்கத் தொடர்ச்சி.)

என்னே ரனையோ ரிடுக்க ணுற்றுத்
தன்னெதிர் நிற்பிற் றுங்கலாற் றுதும்
இளமை யாக்கை யில்லவண் மக்கள்
வளமை யனைத்தும் வாய்மை யில்லென்
றுளமை யுணர்ந் துள்ள முவர்த்தோர்
உளர்தலில் லாவ ருரைத்தலிவ் வனைத்தால்
நன்றே மிகினு நல்லவாக் காணு
தன்றே மிகினு மல்லற் படாஅ
திருமையு முள்ளத் தொருமித் துவப்பர்
பருமை மனத்தவர் பான்மை யுணரா
தாக்குத னீக்குத லமைந்தோ நாமெனப்
போக்கி னுணர்ந்து புலம்புறு நீரர்
மற்றுப், "பிறந்தா ருறுவது பெருகிய துன்பம்
பிறவா ருறுவது பெரும்பே ரின்பம்
பற்றின் வருவது முன்னது பின்னது
அற்றே ருறுவ தாகுமென்" றின்ன
பொருணிலை கூறிப் பொதுநடப் பெருமா
னருணிலை யுரைக்கு மற்புத குருவே!
நீதியி னொழுகி நிலவுகுறி யுட்கோட்
போதக னெவனைப் போதுக மினியே
கார்துளி சிந்தலிற் கவின்றுளிர் சிறந்து
பார்வைக் கணிமிகப் பன்மலர் ததைஇ
இன்காய் பழமிக வேந்திளங் கொடிகள்
நன்கா மரமிற நண்ணிய கதிபோல்
ஏழை யேங்க ளிரும்பட ரெய்த

மாழை யுலகத்து வயங்கினை யந்தோ!
இன்னுஞ் சின்னா ளிருந்தெமை யளித்து
மன்னு னூற்பல மைந்தற் கூட்டி
நின்னுழிச் சார னெறிய தன்றே
கன்னிலை யுலகங் காவல்வலி யின்றே
பற்றுக் கோடில மாயினே மண்ணல்!
கற்றுக் கொண்டிலங் காட்சிநூல் பலவே
கண்ணுந் தோளுமெனக் கதித்திருந் தனையே
எண்ணி னன்பரு மியாங்களு மெல்லாம்
கண்ணிழந் துழலுங் காளையர் போன்றும்
நண்ணிரு தோள்போய் நலியுநர் போன்றும்
ஒன்று மாற்றா துழல்குது மையே!
கன்றிய காதலுங் கானடங் கிற்றே!
யாமே யளிய மில்வது காத்த
காமரு கிளியிற் கற்பன கல்லா
தன்றறி வாமென் றமைந்தன மொழுகி
இன்றவர் தலறி யென்னே யியைகுவது
அன்றியும், கிளியினுங் கேடு கெட்டே மன்றே
விளியுமுன் கண்டு விளம்பிலங் குறையே
கனிந்து கனிந்து காணுத லொழிந்து
நினைந்து நினைந்து நிற்கவைத் தனையே
கதையா யினநின் காட்சி யெல்லாம்
மதிதயிர் மனத்துத் தமியேங் கட்குக்
கதிதரு நின்முகங் காட்டுக வோர்கால்
சேய்த்தோ பெருமநீ யுறையு நிலனே
மண்ணிருப் பின்றெனின் மன்ன
விண்ணிருந் தாகி விளங்குக மிசையே.

ஷெயார் மாணாக்கரு ளொருவராகிய

ஐ. ஏகாம்பர ஐயர்,

ஸ்ரீ சபாநாயகமுதலியார் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்,

சீகாழி.

வெளியாய்விட்டது! வெளியாய்விட்டது!!

பக்திரசம் நிறைந்தது.

பிரகலாதன்.

பாகவத புராணத்தில் கூறப்படும் பிரகலாதன் கதையை அறியாத தமிழர் இல்லை. அது நாடகரூபமாக நவரஸாலங்காரங்களுடன் இனிய எளிய தெளிய தமிழ்நடையில் எழுதப்பட்டிருக்கிறது. இடையிடையே இனிய பாடல்கள் அமைந்துள்ளன. கம்ப ராமாயணம் பாகவதம் முதலிய நூல்களிலிருந்து அநேக மேற்கோள்கள் எடுத்து ஆளப்பட்டிருக்கின்றன. நாவல் படிக்க விரும்பும் தற்கால ஜனங்களுக்கு நாவல்போலவும் நாடகத்தின் அலங்காரங்களை அறிந்து இன்புற விரும்புவோருக்கு நாடகமாகவும் இது அமைந்துள்ளது. இதன் விலை அணா 8. கேட்லாக் வேண்டியவர் ½ அணா தபால் லேபில் அனுப்பவேண்டும்.

தனபதி.

படிப்பவர் மனத்தைப் பரமானந்தத்தில் ஆழ்த்தும் பலவித கற்பனாலங்காரக் கதை; இதில் தனபதி என்னும் அரசன் தன் வண்ணானை அரசனாக நியமிக்க, அவ் வண்ணான் அப்போதும் தன் புத்திபோகாமல், அரண்மனையை அவலமாக்குவது படிக்கப் படிக்க விடாநகைப்பை விளைவிக்கும்.

இதன் விலை அணா 2. வி. பி. சார்ஜ் பிரத்தியேகம். தனிப் புத்தகம் வேண்டுவோர் 2½ அணா தபால் லேபில் அனுப்ப வேண்டும்.

அதிக பக்ஷமுள்ள நண்பர்கள் அனைவருக்கும் தெரிவிக்கத் தக்கது:—

நாவல் படிக்கவேண்டுமானால் இப்பேர்க்கொத்த நாவலையல்லவோ படிக்கவேண்டும். அது என்ன நாவல்? நமது ரங்கராஜு அவர்களால் எழுதிய நான்கு நாவல்கள்.

இராஜாம்பாள்	0—12—0
ஆனந்த கிருஷ்ணன்	0—12—0
சந்திரகாந்தா	0—12—0
மோஹனசுந்தரம்	0—12—0

பி. வி. கண்ணன் அண்டு கம்பெனி,

சிந்தாதிரிப்பேட்டை சென்னை.

1917

புதிய புஸ்தகம் தயாராயிற்று.

“வாழ்வின் மேன்மை.”

கிடைத்தற்கரிதான மானிட தேகத்தைப் போற்றி நீடித்தகாலம் சுகமாக வாழ்வதற்கு அனுகூலமான அநேக விஷயங்களை, எளிதில் தெரிந்துகொள்ளும்வண்ணம் எழுதி வெளியிட்டிருக்கிறோம். ஒவ்வொருவரும் வாசிக்க வேண்டிய தவசியம். யுத்தகாலம் காகிதப்பஞ்சம் சொற்ப பிரதிகள்தான் கைவசம். முந்துங்கள். உங்கள் விலாசத்தை யெழுதி அனுப்புங்கள். இனாமாகவும் தபாற் செலவில்லாமலும் அனுப்புகிறோம்

வைத்தியசாஸ்திரி,

மணிசீங்கர் கோவிந்தஜீ,

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,

157, பிராட்வே, மதராஸ்.

புதுவை — சைகோன் சின்னையா பிரஸ்